Annual Subscription – Rs.130/-
ஆண்டு சந்தா – ரூ.130/-

Price – Rs.10/-
தனி பிரதி – ரூ.10/-

# பொறியாளர்
# PORIYAALAR

கட்டடம் - 12
Volume – 12

அடுக்கு - 6
Issue - 6

மார்ச் 2021
March 2021

## GENERAL ELECTIONS 2021

Exercising the right to vote is crucial to the democratic process and strengthening the foundations of democracy. As a Citizen of India it is incumbent on each person to exercise the right to choose law makers.

**"Your Vote Matters - Vote Without Fail"**

\- Editor

பொறியாளர் சங்கம் மற்றும் உதவிப் பொறியாளர் சங்கம்
தமிழ்நாடு பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005
தொலைபேசி: 044-2851 5445 / 044-2951 0445
பொறியாளர் இராமலிங்கம் இல்லம் : 044 - 2854 4043
website : www. aoeaeatnpwd.org / e-mail : aoe aea@yahoo.com, gsaoe.pwd@gmail.com

## மார்ச் 9 நினைவு நாள்



**Col. John Pennycuick**
(15 January 1841, - 9 March 1911)

திரண்டு கிடந்த
திரவியங்களை எல்லாம்
சுரண்ட வந்த ஆங்கிலேயன்
பலவற்றை
அழியாச் சொத்துகளாய்
ஆக்கிவிட்டுப் போனான்!

மந்திரங்களை மட்டுமே சொல்லி
மழைவேண்டி நின்ற ஊரில்
எந்திரங்களைக் கொண்டு
மழைநீர் தேக்க
மதகுகள் கட்டினான்.

**காட்டன்** என்றொரு
ஆங்கிலப் பாட்டன்!
தமிழ்க் குழந்தைகட்கு
எள்ளுத் தாத்தா போல
**எல்லீஸ்** தாத்தா!
எண்ணி எண்ணி வியக்குமளவு
பெரும்பணி ஆற்றிய
**பென்னிக்குவிக்**!

பெரியார் அணை பெருவெள்ளத்தில்
கட்டுமானங்கள் காணாமல் போய்
அவனின் திருவுள்ளத்தால் திரும்ப வந்தது.
இங்கிலாந்தில்
உச்சாணிக் கொம்பிலிருந்து
உத்தரவிட்டும் - அணைக்கு
அச்சாணியாய் இருந்தவன்
அசைந்து கொடுக்கவில்லை...

சூதுவாது அறியாத
சேது மன்னர்கள்
காலத்திலேயே-முத்து
இருளப்பப் பிள்ளை போட்ட திட்டம்!
இருள் அப்பிப் போய்க் கிடந்த
தமிழர் வாழ்வில்
ஆங்கில மெழுகுவர்த்தியொன்று
தன்னை உருக்கிக் கொண்டு-புகழைப்
பெருக்கிக் கொண்டது.
அதன் பெயர் **பென்னிகுவிக்.**

இந்தியாவில் அணைகட்ட
பத்தோடு பதினொன்றாய்
வந்து போனவனல்ல
குடும்பத்தோடு வந்து ஒன்றிரண்டை
இழந்தும் போனவன்!

அணைகட்டிக் கொடுத்து அவன்
வழிகாட்டினான் - வாழ்வெல்லாம்
பிணை கட்டிக் கொண்டு பராரியாய்த்
திரிந்தவர்கள் திருந்தினார்கள்.

கம்பு வேல் குரடோடு
தொல்லை தந்தவர்கள்
கம்பு கேழ் வரகோடு
நெல்லை அறுவடை செய்து
நிறைவாழ்வு வாழ்கிறார்கள்!

அணைக்காக அவன்
ஆங்கிலேயர்களுடன் போராடினான் - நாமோ
இந்தியர்களுடன் போராடுகிறோம்!

காட்டினங்களால்
இடர்பாடுகள் இருந்தபோதும்
தொடர்பாடுகள் அவன்பட்டு
தொடங்கி வைத்தான்
மறத்தமிழர் வாழ்வை!
நன்றி மறவா நற்றமிழர் கூட்டம்
என்று மிறவா அவன்புகழ் பாடுகிறது.

மண்கண்ட மாண்புகுறையாமல்
கண்கண்ட கடவுள் அவனென
படையலிட்டு அவனை
வணங்குகிறார்கள்!

மனமிருந்தால் மார்க்கமுண்டு
என்பார்கள் - இங்கு
மார்க்கமெல்லாம் இருக்கிறது
மனம்தான் இல்லை!
கால்வாய் அரைவாய் சாப்பிட்டாலும்
கால்வாய் வெட்டிய அவனை
"வயிறாற" வாழ்த்துகிறார்கள்!

**பொறி.தி.த.சண்முக வடிவேல்,**
முன்னாள் செயற்பொறியாளர் பொபது, திருச்சி

***Editorial***

## Increase in retirement age – Not needed

The Government recently increased the retirement age of Government Servants for further one year i.e. from 59 years to 60 years during the last session of the present assembly. While Government Servants expected some financial relief, promotion, restoration of Old Pension Scheme from this Government, they increased the retirement age without any demand from any of the service Association. This is done just to postpone the payment of retirement benefits to the employee's in view of the severe financial crunch in the Government. There is no employee's welfare in this announcement.

The immediate effect of this announcement is postponement of new recruitments of unemployed graduates to the Government Service and stopping of promotions of existing Government servants for another one year. Over all it will be better if this announcement was avoided.

**- Editor**

**பொறியாளர் உறுப்பினர்களுக்கு அன்பான வேண்டுகோள்!!!**

பொறியாளர் இதழ் ஒவ்வொரு உறுப்பினரும் தவறாமல் பெறுவதற்கு ஏதுவாக தங்கள் முகவரியில் ஏதேனும் மாற்றம் இருப்பின் அதனை உடனடியாக தலைமைச் சங்கத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொறியாளர் இதழை தவறாமல் வாசியுங்கள், தங்களின் கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**சங்கத்தின் தொலைபேசி எண்கள்: 044-28515445 / 044-29510445**

**மின்னஞ்சல் முகவரி: gsaoe.pwd@gmail.com / aoe_aea@yahoo.com**

13.03.2021

**பொதுச் செயலாளர் மடல்**

**பெருமதிப்பிற்குரியீர், பேரன்பிற்கினியீர், வணக்கம்.**

✍ நமது பொறியாளர்களின் ஊதியக் குறைப்பு தொடர்பான அரசாணைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் அனைத்தும் (சென்னை உயர்நீதிமன்றம், மதுரை அமர்வில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் உட்பட) ஒரே தொகுப்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட உள்ளது. இவ்வழக்குகள் கடந்த 2 வாரமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்து பட்டியலிடப்பட்டு வந்தாலும் இதுவரை விசாரிக்கப்படவில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறோம். இந்த வழக்குகளில் ஆணை பிறப்பிக்கப்படும் வரை நாம் ஏற்கனவே பெற்றுள்ள தடையாணை தொடரும் எனத் தெரிவித்துக்கொள்கிறோம்.

✍ இந்த ஆண்டு காலியிட மதிப்பீடு ஒப்புதல் வழங்கப்பட்ட உதவிச் செயற்பொறியாளர் (சிவில்) மற்றும் செயற்பொறியாளர் (சிவில்) பதவி உயர்வு வழக்குகள் காரணமாக இதுவரை வழங்கப்படவில்லை. கண்காணிப்புப் பொறியாளர் (சிவில்) பதவி உயர்வும் இதுவரை வழங்கப்படவில்லை. தற்போது சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டதால் தேர்தல் நடைமுறை முடியும் வரை பதவி உயர்வு வழங்குவது காலதாமதமாகும் என அறிகிறோம்.

✍ கடந்த 18.02.2021 அன்று தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் கூட்டம் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவராக நமது பொறியாளர் சங்க மாநிலத் தலைவர் பொறி.K.பிரபாகர் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். அவருக்கும், பிற பொறுப்பாளர்களுக்கும் நம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இக்கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பு இவ்விதழில் பிறிதொரு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

✍ சட்டமன்ற தேர்தல் முடிந்து அமையவுள்ள புதிய அரசிடம் ஊதிய விகிதம், பதவி உயர்வு உட்பட்ட நமது கோரிக்கைகளை உரிய முறையில் எடுத்துரைத்து நல்ல தீர்வு காணப்படும் என தெரிவித்துக்கொள்கிறோம்.

✍ நமது சங்கங்களின் மாநில பொதுக்குழு, உறுப்பினர்கள் அனைவரும் நேரிடையாக கலந்துகொள்ளும் வகையில் நடைபெற உள்ளது என தெரிவித்துக்கொள்கிறோம். இதற்கான நாள் மற்றும் இடம் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது.

மிக்க அன்புடன்,

**பொறிஞர்.மு.தனசேகரன்,**
பொதுச் செயலாளர், உதவிப் பொறியாளர் சங்கம்

**பொறிஞர்.கா.முருகன்,**
பொதுச் செயலாளர், பொறியாளர் சங்கம்

## சங்கத்தின் கோரிக்கைக் கடிதங்கள்

Letter to **The Principal Secretary to Government,** Public Works Department, Secretariat, Chennai-600009 on Grievance of our Engineers working under the control of present Chief Engineer / Director, Institute of Water Studies, Hydrology & Quality Control, WRO, Tharamani, Chennai-113 – Action requested – Reg. vide **Letter No.011/GS-AOE/2021, Dated:23.01.2021.**

Sir,

We wish to bring the following grievances of our Engineers working under the control of present Chief Engineer / Director, Institute of Water Studies, Hydrology & Quality Control, WRO, Tharamani, Chennai-113.

1. Abnormal delay in giving reposting to Assistant Engineers posted in Institute of Water Studies, Hydrology & Quality Control, WRO, Tharamani, Chennai-113.
2. Not scrutinized and forwarded the Confidential Reports of Assistant Engineers, Assistant Executive Engineers and Executive Engineers working under his control.
3. Abnormally delayed the pension proposal of Superintending Engineer / Joint Director working under him.
4. Not approving the salary of Executive Engineer **Er.Muthu Parvatha Vardhini** for the past 7 months, even though represented to him many times in person and through our Association letter No.Letter No.003/GS-AOE/174-2020 Dt:19.09.2020 & Letter No.003/GS-AOE/177-2020, Dt:20.10.2020. Not giving LPC even after her transfer from IWS to CTC.
5. Not giving LPC and service register to the transferred Engineers in time, thereby causing financial hardships to them.
6. Simply sitting over the files and personal papers of individuals without taking any decision (Dereliction of his duty).

We request that the above grievances may be enquired and suitable action taken against the present Chief Engineer / Director, Institute of Water Studies, Hydrology & Quality Control, WRO, Tharamani, Chennai-113 for the benefit of our member Engineers.

With kind regards,

Yours truly,

**Er.K.Murugan,**

General Secretary,

Association of Engineers, TNPWD

## தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் கூட்டம் 18.02.2021 அன்று நெடுஞ்சாலை பொறியாளர் சங்க அலுவலகம், 35v, தாசில்தார் அலுவலக சாலை, சைதாப்பேட்டையில் நடைபெற்றது.

பல்வேறு துறைகளை சார்ந்த பொறியாளர்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சி நிரலையொட்டி நடைபெற்ற பல்வேறு விவாதங்களுக்கு பிறகு கீழ்கண்ட பொறியாளர்கள் கூட்டமைப்பின் பொறுப்பாளர்களாக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | பொறி.K.பிரபாகர் | பொதுப்பணி துறை | 8056291841 |
| துணைத் தலைவர் | பொறி.B.தனசீலன் | நெடுஞ்சாலை துறை | 7338931241 |
| பொதுச் செயலாளர் | பொறி.T.ஜெயந்தி | மின்சார வாரியம் | 9710622185 |
| செயலாளர் (நிர்வாகம்) | பொறி.C.ஹேமச்சந்திரன் | மாநகர போக்குவரத்து | 9551160260 |
| செயலாளர் (ஒருங்கிணைப்பு) | பொறி.R.தனசேகர் | சென்னை மாநகராட்சி | 9444150966 |
| செயலாளர் (விளம்பரம்) | பொறி.P.T.V.சுரேஷ்குமார் | மாநகர குடிநீர் | 9962511899 |
| செயலாளர் (செயலாக்கம்) | பொறி.S.பிரகாஷ் | ஊரக வளர்ச்சி | 9488666555 |
| பொருளாளர் | பொறி.R.தீபக் | நெடுஞ்சாலை துறை | 9444525770 |
| உள் தணிக்கையாளர் | பொறி.M.அருண்குமார் | குடிசை மாற்று வாரியம் | 9629284414 |

தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் பதவி ஏற்றுக் கொண்டனர். தலைவராக பொறுப்பேற்றுக்கொண்ட பொறி.K.பிரபாகர் கூட்டத்தை தொடர்ந்து தலைமையேற்று நடத்தினார்.

புதிய பொதுச்செயலாளராக பதவியேற்று பொறி.T.ஜெயந்தி, தமிழ்நாடு மின்வாரியத்தில் அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக 21.12.2020 அன்று நடைபெற்ற தனியார்மயத்திற்கு எதிரான உள்ளிருப்பு போராட்டத்தை பற்றியும் அதன் வெற்றி பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் கூட்டம், தமிழ்நாடு மின்வாரியத்தில் நடைபெற்ற போராட்டத்தின் வெற்றிக்கும் ஒற்றுமைக்கும் பாராட்டுக்கள் தெரிவித்தது. தொடர்ந்து பேசிய உறுப்பினர்களுடன் இணைந்து செல்ல வேண்டிய அவசியம் பற்றி எடுத்துரைத்தனர். பல்வேறு துறைகள் மற்றும் சென்னை மாநகராட்சியில் நடைபெறும் தனியார்மயத்தை பற்றியும் விவாதிக்கப்பட்டது.

தொடர்ந்து நிகழ்ச்சி நிரலையொட்டி விவாதங்கள் நடைபெற்றபின் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## தீர்மானங்கள்:

1. தமழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் பொறுப்பாளராக இதுகாறும் வழி நடத்திய பொறியாளர்களுக்கு இக்கூட்டமைப்பு தனது நன்றிகளை பதிவு செய்கிறது. புதிதாக பொறுப்பேற்றுள்ள பொறுப்பாளர்களை அன்புடன் வாழ்த்தி வரவேற்கிறது.
2. தமிழக அரசில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு One man commission படி ஊதியத்தை நிர்ணயம் செய்திடவும், 7th Pay Commission படி ஊதியத்தை உயர்த்த தமிழக அரசை இக்கூட்டமைப்பு அன்புடன் வேண்டுகிறது.
3. பொதுத்துறை மற்றும் அரசு துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கும் கொள்கைகளை கைவிட்டு மக்களுக்கு சேவை புரிய கூடிய சூழல் தொடர்ந்திட வேண்டும் எனவும் தனியார்மயக் கொள்கைகளை கைவிட வேண்டும் எனவும் மத்திய மாநில அரசுகளை கூட்டமைப்பு வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
4. தமிழ்நாடு மின் வாரியத்தில் G.O.100 dt.19.10.2010 படி தமிழக அரசின் முழு உத்தரவாதத்துடன் கூடிய முத்தரப்பு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டு பணி பலன்களை உறுதி செய்திட தமிழக அரசை கூட்டமைப்பு அன்புடன் வேண்டுகிறது.
5. படித்து பட்டம் பெற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக பல ஆண்டுகளாக காத்திருக்கும் சூழலில் பணியில் இருக்கும் அலுவலர்கள் ஓய்வு பெறும் வயதை நீட்டிப்பது அவர்களின் வேலை வாய்ப்பு கதவை தட்டிப் பறிப்பதாகும் எனவே அரசு பணியில் பணிபுரியும் அலுவலர்களின் வயதை எக்காரணத்தைக் கொண்டும் 59 வயதுக்கு மேலும் நீட்டிப்பு செய்ய கூடாது என தமிழக அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.
6. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பொறியாளர்கள் பல ஆண்டுகளாக பணி புரிந்தும் அடுத்த பதவி உயர்வு பெற இயலாத சூழ்நிலை உள்ளதால் அரசு மருத்துவர்களுக்கு வழங்கியது போன்று கால வரம்புக்கு உட்பட்ட பதவி உயர்வு வழங்கிட நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை இக்கூட்டமைப்பு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.
7. அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியில் உள்ளவர்கள் உரிய விசாரணையின்றி தற்காலிகப் பணி நீக்கம் போன்ற நடவடிக்கைகளை எடுக்கும் முன் துறை ரீதியான விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு இக்கூட்டமைப்பு கேட்டுக்கொள்கிறது.
8. அரசு பணிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பின் அவர்களுக்கு பணி நீட்டிப்பு செய்வதோ அல்லது வேறு எவ்வகையிலேனும் (Consultant/OSD) அவர்களைத் தொடர்ந்து பணிபுரிய அனுமதிப்பதை கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது.
9. வேளாண் சட்டங்களை நீக்க வேண்டி பல மாதங்களாகப் போராடி கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு வாழ்த்துக்களையும் ஆதரவையும் தெரிவித்துக்கொள்கிறது. அவர்களின் கோரிக்கைகளை மத்திய அரசு கனிவுடன் பரிசீலித்து உடனடியாக தீர்வு காணுமாறு தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு அன்புடன் வேண்டிக்கொள்கிறது.

கூட்டத்தின் நிறைவாக பொறி.M.அருண் குமார், உதவி பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் நன்றி உரை வழங்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.

| | |
|---|---|
| **பொறி.K.பிரபாகர்** | **பொறி.T.ஜெயந்தி** |
| தலைவர், த.நா.பொறியாளர் கூட்டமைப்பு | பொதுச் செயலாளர், த.நா.பொறியாளர் கூட்டமைப்பு |

ஒரு நபர் ஆணையம் பரிந்துரைத்த ஊதியத்தை வழங்கவும் வலியுறுத்தல்

# அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை நீட்டிப்பு செய்யக்கூடாது

## தமிழ்நாடு பொறியாளர்கள் கூட்டமைப்பு கண்டனம்

**சென்னை, பிப்.28:** அரசு ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை நீட்டிப்பு செய்யக்கூடாது என்று தமிழ்நாடு பொறியாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. மேலும், பொறியாளர்களுக்கு ஒரு நபர் ஆணையம் பரிந்துரைத்தை ஊதியத்தை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு பொறியாளர்கள் கூட்டமைப்பு தலைவர் பிரபாகர், பொதுச்செயலாளர் ஜெயந்தி ஆகியோர் கூட்டாக சென்னையில் நிருபர்களிடம் கூறியதாவது:

படித்து பட்டம் பெற்ற இளைஞர்கள் வேலை வாய்ப்புக்காக பல ஆண்டுகளாக காத்திருக்கும் சூழலில் பணியில் இருக்கும் அலுவலர்கள் ஓய்வுபெறும் வயதை நீட்டிப்பது அவர்களின் வேலை வாய்ப்பு கதவை தட்டி பறிப்பதாகும். எனவே அரசு பணியில் பணியில் பணிபுரியும் அலுவலர்களின் வயதை நீட்டிப்பு செய்ததை ரத்து செய்ய வேண்டும்.

அரசு பணிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பின் அவர்களுக்கு பணி நீட்டிப்பு செய்வதோ அல்லது வேறு எவ்வகையிலும் அவர்களை தொடர்ந்து பணி புரிய அனுமதிக்க கூடாது. தமிழக அரசில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு ஒருநபர் ஆணையத்தின் ஊதியத்தை நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையில் 7வது ஊதிய ஆணையத்தில் ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும்.

அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பொறியாளர்கள் பல ஆண்டுகளாக பதவி உயர்வு இல்லாமல் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, அரசு மருத்துவர்களுக்கு வழங்கியது போன்று கால வரம்புக்கு உட்பட்ட பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியில் உள்ளவர்கள் உரிய விசாரணையின்றி தற்காலி பணி நீக்கம் போன்ற நடவடிக்கைகளை எடுக்கும் முன்பு துறை ரீதியான விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசுக்கு வளம் சேர்க்கும் வகையில் இந்திய நாட்டின் முன்னோடியாக தமிழகம் திகழ தமிழ்நாடு பொறியாளர்கள் கூட்டமைப்பு சார்பில் பொறியாளர் சீர்திருத்த ஆணையம் அமைக்க தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம்.

பொதுத்துறை மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள் தனியார் மயமாக்கும் கொள்கைகளை கைவிட்டு மக்களுக்கு சேவை புரிய கூடிய சூழல் தொடர்ந்திட தனியார் மய கொள்கைகளை கைவிட வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகரன் : 28.02.2021

**TAMIL NADU PWD SENIOR ENGINEERS ASSOCIATION**

Er.K.Ramalingam
President
☎ 044-2818 1640

Er.A.Veerappan
Secretary
☎ 044-6566 8377

25-02-2021

**Dear Er.Murugan,**

**Sub:- Poriyaalar February 2021 – Editorial Encroachment of PWD by Retired Engineers to be stopped – welcomed.**

- Vanakkam and Best wishes

1. We have read your Poriyaalar February 2021 editorial on **"Encroachment of Department by retired engineers to be stopped"** and we support your stand not to reappoint or engage the retired PWD engineers in Tamilnadu River Restoration Corporation, Water Resources Development Cell, marina work etc under the guise of giving guidance and doing third party quality auditing. We have immense faith that present in service engineers are quite capable of executing works with some short comings. We therefore advise our member Senior Engineers not to accept such appointments (excluding external consultancy) and interfere in the administration of PWD Engineers.

2. At the same time, may we request you to intimate your in service member engineers to get them updated in construction and advanced technologies so that they can endeavour to provide opportunity for the professional development and advancement of younger engineers employed in TNPWD.

3. And also request you to kindly raise your strong protest against the recent hasty actions of the Government in treating top level engineers badly reminding the Government that they are **Professional Advisors** to the Government and so they of are not subordinates to the political ministers under power. Kindly remember the bold actions of AOE & AEA TNPWD in the past against atroceous then minister and Secretary to Government. (Thiru.S.Kannappan & Thiru.N.P.Gupta IAS)

4. We assure you to support your actions for protecting the service interests of members engineers and fair name of the Department.

With regards

Er.A.Veerappan
State Secretary / TANSEA

To
**Er.K.Murugan ME**
General Secretary
Association of engineers, TNPWD
**Cheppakkam, Chennai – 600005.**

---

**சென்னைக்கு வரும் பொறியாளர் உறுப்பினர்கள் அனைவரும் புதுப்பிக்கப்பட்ட பொறியாளர் இராமலிங்கம் இல்லத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் AC & WiFi உட்பட செய்யப்பட்டுள்ளது.**

**- இல்லப் பொறியாளர், சென்னை**

## GOVERNMENT ORDERS

**ABSTRACT**

Establishment – Water Resources Department – Formation of Special Project Division, Pudukottai under Special Project Circle, Water Resources Department, Trichy by redeploying Special Project Division, Cuddalore under Vellar Basin Circle, Cuddalore – Attachment of Special Project Sub Division III, Cuddalore under Special Project Division, Cuddalore to the Vellar Basin Division, Vridhachalam under Vellar Basin Circle, Cuddalore and reorganization of Special Project Division, Kulithalai, under Special Project Circle, Trichy – Orders – Issued.

**Public Works (F1) Department**

G.O.(D)No.38 Dated:18.02.2021

Read:

From the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai, Letter.No.AEE/T1/AE3/12689/2020, dated: 03.11.2020

**ORDER:-**

In the letter read above, the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai has stated that the scheme Inter-Linking of Cauvery-Agniyar-South Vellar – Manimuthar – Vaigai – Gundar Canal was prepared for "Peninsular River Link Surplus" by the National Water Development Agency of the Government of India. Under this scheme, a barrage was constructed during 2014 across the river Cauvery in Mayanur Village of Karur District. It is now proposed to construct a flood carrier canal taking off from the downstream of this barrage to divert the flood water of the river Cauvery to South Vellar river.

2. He has further stated that in G.O.(Ms)No.101, Public Works (N2) Department, dated 27.04.2020, the Government have accorded sanction for acquisition of 572.56.0 hectares of patta lands and transfer of 83.80.0 hectares of Poromboke lands in Pudukkottai District for the formation of Flood Carrier Canal from Cauvery (Kattalai) to South Vellar river to divert the flood water for the benefit of the drought prone area.

3. For carrying over the above work, the Engineer-in-Chief, Water Resrouces Department and Chief Engineer (General), Public Works Department has proposed to form a Special Project Division at Pudukottai under Special Project

Circle, Trichy under the control of the Chief Engineer, Water Resources Department, Trichy Region, Trichy by redeploying Special Project Division, Cuddalore along with its Sub Division-I, at Kallakurichi under Vellar Basin Circle, Cuddalore under the control of Chief Engineer, Water Resources Department, Chennai Region, Chennai and by attaching Special Project Sub Division, Viralimalai from Special Project Division, Kulithalai. He has also proposed to attach the Special Project Sub Division III, Cuddalore under Special Project Division, Cuddalore to the Vellar Basin Division, Vridhachalam under Vellar Basin Circle, Cuddalore for carrying over the remaining works and maintaining the records and files pertaining to Special Project Division, Cuddalore.

4. He has also proposed to reorganize the Special Project Division, Kulithalai by detaching Special Project Sub Division, Viralimalai and forming a Special Project Sub Division, Karur by redeploying the Special Project Sub Division II at Sethiathope under Special Project Division, Cuddalore.

5. The Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai further informed that the expenditure towards shifting of offices can be met out from the available budget provision under respective office contingencies. Hence, no additional funds and no additional staff will be required. The Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai has requested the orders of the Government on the above proposals.

6. The Government after careful examination of the proposals of the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, decided to accept them and accord sanction for the formation of Special Project Division at Pudukottai under Special Project Circle, Trichy under the control of Chief Engineer, Water Resources Department, Trichy Region, Trichy by redeploying Special Project Division, Cuddalore under Vellar Basin Cirlcle, Cuddalore under the control of Chief Engineer, Water Resources Department, Chennai Region, Chennai, attachment of Special Project Sub Division III, Cuddalore under Special Project Division, Cuddalore to the Vellar Basin Division, Vridhachalam under Vellar Basin Circle, Cuddalore for carrying over the remaining works and maintaining the records and files pertaining to Special Project Division, Cuddalore and reorganization of Special Project Division, Kulithalai, under Special Project Circle, Trichy as detailed in the Annexure I to VI to this order.

7. This order issues with the concurrence of Finance Department – vide its U.O.No.7509/PW-II/2021, dated 16.02.2021.

(BY ORDER OF THE GOVERNMENT)

**K.MANIVASAN**

PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

## ANNEXURE-I
### G.O.(D) No.38, Public Works (F1) Department, dated 18.02.2021
### Formation of Special Project Division at Pudukottai

| Sl. No. | Existing | | | Proposed | | |
|---|---|---|---|---|---|---|
| | Division / Sub Division | Circle / Division | Region | Division / Sub Division | Circle / Division | Region |
| 1 | Special Project Division, Cuddalore | Vellar Basin Circle, Cuddalore | Chennai Region, WRD | Special Project Division, Pudukottai | Special Project Circle, Trichy | Trichy Region, WRD |
| 2 | Special Project Sub Division-I, Kallakurichi | Special Project Division, Cuddalore | Chennai Region, WRD | Special Project Sub Division, Pudukottai | Special Project Division, Pudukottai | Trichy Region, WRD |
| 3 | Special Project Sub Division, Viralimalai | Special Project Division, Kulithalai | Trichy Region, WRD | Special Project Sub Division, Viralimalai | Special Project Division, Pudukottai | Trichy Region, WRD |

**K.MANIVASAN**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

---

## ANNEXURE-II
### G.O.(D) No.38, Public Works (F1) Department, dated 18.02.2021
### Reorganisation of Special Project Division at Kulithalai

| Sl. No. | Existing | | | Proposed | | |
|---|---|---|---|---|---|---|
| | Division / Sub Division | Circle / Division | Region | Division / Sub Division | Circle / Division | Region |
| 1 | Special Project Division, Kulithalai | Special Project Circle, Trichy | Trichy Region, WRD | Special Project Division at Kulithalai | Special Project Circle, Trichy | Trichy Region, WRD |
| 2 | Special Project Sub Division, Kulithalai | Special Project Division, Kulithalai | Trichy Region, WRD | Special Project Sub Division, Kulithalai | Special Project Division, Kulithalai | Trichy Region, WRD |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | Special Project Sub Division, Mayanur | Special Project Division, Kulithalai | Trichy Region, WRD | Special Project Sub Division, Mayanur | Special Project Division, Kulithalai | Trichy Region, WRD |
| 4 | Special Project Sub Division-II, Sethiyathope | Special Project Division, Cuddalore | Chennai Region, WRD | Special Project Sub Division, Karur | Special Project Division, Kulithalai | Trichy Region, WRD |

**K.MANIVASAN**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

## ANNEXURE-III
### G.O.(D) No.38, Public Works (F1) Department, dated 18.02.2021
### Attachment of Special Project Sub Division III, Cuddalore to Vellar Basin Division, Vridhachalam

| Sl. No. | Existing | | | Proposed | | |
|---|---|---|---|---|---|---|
| | **Division / Sub Division** | **Circle / Division** | **Region** | **Division / Sub Division** | **Circle / Division** | **Region** |
| 1 | Vellar Basin Division, Vridhachalam | Vellar Basin Circle, Cuddalore | Chennai Region, WRD | Vellar Basin Division, Vridhachalam | Vellar Basin Circle, Cuddalore | Chennai Region, WRD |
| 2 | Vellar Basin Sub Division-1, Cuddalore | Vellar Basin Division, Vridhachalam | Chennai Region, WRD | Vellar Basin Sub Division-1, Cuddalore | Vellar Basin Division, Vridhachalam | Chennai Region, WRD |
| 3 | Vellar Basin Sub Division-2, Vridhachalam | Vellar Basin Division, Vridhachalam | Chennai Region, WRD | Vellar Basin Sub Division-2, Vridhachalam | Vellar Basin Division, Vridhachalam | Chennai Region, WRD |
| 4 | Vellar Basin Sub Division-3, Kallakurichi | Vellar Basin Division, Vridhachalam | Chennai Region, WRD | Vellar Basin Sub Division-3, Kallakurichi | Vellar Basin Division, Vridhachalam | Chennai Region, WRD |
| 5 | Special Project Sub Division-III, Cuddallore | Special Project Division, Cuddalore | Chennai Region, WRD | Special Project Sub Division-III, Cuddalore | Vellar Basin Division, Vridhachalam | Chennai Region, WRD |

**K.MANIVASAN**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

## ABSTRACT

Public Services – Age of Superannuation of Government servants, teachers, etc. – Increased to 60 years – Orders Issued.

**PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (S) DEPARTMENT**

G.O.(Ms)No.29 Dated:25.02.2021

Read:

1. G.O.(Ms.)No.532, Personnel and Administrative Reforms (Personnel-M) Department, Dated 25.04.1979
2. G.O.(Ms.)No.51, Personnel and Administrative Reforms (Personnel-M) Department, Dated 07.05.2020
3. Announcement made by the Hon'ble Chief Minister under Rule 110 on the floor of the Tamil Nadu Legislative Assembly on 25.02.2021

ORDER:-

During the Interim Budget session 2021-2022, the Hon'ble Chief Minister has made an announcement on the floor of the Tamil Nadu Legislative Assembly on 25.02.2021 inter-alia to increase the retirement age of Tamil Nadu State Government employees from 59 to 60 years and the orders would be applicable to employees of the Government and Government Aided Educational Institutions, Legal and Constitutional Bodies, Public Sector Undertakings, Local Bodies, Commissions, Boards and Societies. The Hon'ble Chief Minister also said that all those who are in service and those who would retire on 31.05.2021 would be covered under the announcement.

2. Accordingly, the Government orders to increase the age of superannuation of Government servants / teachers from 59 years to 60 years. This will apply to all those who are in service as on date and due to retire on superannuation from 31.05.2021.

3. This order shall also be applicable to all teaching and non-teaching staff working in aided educational institutions and employees of all Constitutional / Statutory Bodies, Public Sector Undertakings including all State Corporations, Local Bodies, Boards, Commissions and Societies.

4. Necessary amendments to Tamil Nadu Fundamental Rules will be issued separately.

**(BY ORDER OF THE GOVERNMENT)**

**S.SWARNA,**

PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

## ABSTRACT

Establishment – Public Works Department – Tamil Nadu Engineering Service – Re-designation of two posts of 'Executive Engineer' – one as 'Deputy Chief Engineer (Irrigation)' and another as 'Deputy Chief Engineer (General)' in the office of the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai – Orders – Issued.

**Public Works (A2) Department**

G.O.(4D)No.39 Dated:22.02.2021

Read:

1. G.O.(D)No.482, Public Works (WR1) Department, dated 24.08.2007
2. G.O.(Rt)No.324, Public Works (F1) Department, dated 24.06.2013.
3. G.O.(Ms)No.145, Public Works (F1) Department, dated 30.09.2019.
4. From Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Letter No.AEE/T1/ AE-3/30838/2017, dated 26.08.2019.
5. G.O(D)No.28, Public Works (F1) Department, dated 10.02.2021

**ORDER:-**

In the Government order first read above, among others, five numbers of Executive Engineer post have been sanctioned to the office of Engineer-in-Chief, Water Resources Department for looking after the IAMWARM work. In the Government order second read above, among others, sanction was accorded for further continuance of two temporary psts of Executive Engineer for IAMWARM Project from 01.07.2013 to 30.06.2015 only. Subsequently, continuance for three nos. of Executive Engineer post have been accorded in the Government order third read above, upto 31.12.2021.

2. The Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai in his letter fourth read above has stated the specific need for re- designating the post of Executive Engineer as Deputy Chief Engineer (Irrigation) in the Office of the Engineer-in-Chief, Water Resources Departent and Chief Engineer (General), Public Works Department, Chennai as follows:

i. The designation of the Executive Engineer cadre varies based on the office in which the said post is sanctioned. The Executive Engineer cadre sanctioned in division office is designated as "Executive Engineer", while in circle offices, the said post is designated as "Deputy Superintending Engineer" and in region/Chief Engineer offices, the said post is designated as "Deputy Chief Engineer". This has been followed throughout the State to categorize the work nature of the cadre. Even though the designation differs, the scale of pay for the Executive Engineer cadre remains the same.

ii. Hence, it is necessary to re-designate the Executive Engineer cadre post sanctioned for IAMWARM cell as Deputy Chief Engineer (Irrigation) in the office of Engineer-in-Chief, Water Resources Departent and Chief Engineer (General), Public Works Department and be utilized for carrying out the increasing excess work in the office of Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai.

3. He has also stated the need for an additional post of Deputy Chief Engineer (General) in the cadre of Executive Engineer in the office of the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai as follows:

i. The Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department is the head of the department and also the administrative head of the entire Water Resources Department and Public Works Department.

ii. The preparation of Promotion panels, maintaining seniority list for various cadre, transfer & posting of personnel, dealing with court cases, obtaining continuance for temporary post, redeployment of offices, disciplinary actions, etc., of the entire department was handled by the Joint Chief Engineer (General) in the office of the Chief Engineer (General).

iii. The pressure and voluminous work in the administration of Public Works Department increased tremendously over years.

iv. As there is no third level officer (i.e.) Deputy Chief Engineer (General) in the cadre of the Executive Engineer, in the office of the Chief Engineer (General), Public Works Department, all the subject matter are to be submitted for perusal to the Joint Chief Engineer (General) or to the Chief Engineer (General) depending on the significance of the issue. There are certain subjects which could be sorted out below the level of Joint Chief Engineer (General), so that appropriate action shall be taken in time.

v. Hence, one post of Deputy Chief Engineer (General) in the cadre of Executive Engineer is very much essential in the office of Chief Engineer (General), Public Works Department.

4. The Engineer-in-Chief, Water Resources Departent and Chief Engineer (General), Public Works Department, Chennai has requested the orders of the Government to re-designate one post of Executive Engineer in the Office of the Engineer-in-Chief, Water Resources Departent and Chief Engineer (General), Public Works Department, Chennai as Deputy Chief Engineer (Irrigation) and also to re-designate one post of Executive Engineer as Deputy Chief Engineer (General) in the Office of the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai.

5. In the Government order fifth read above, orders have been issued for continuance of one temporary post of Executive Engineer in the Office of the Engineer-

in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai upto 31.12.2021.

6. The Government after careful examination have decided to accept the proposal of the Engineer-in-Chief, Water Resources Departent and Chief Engineer (General), Public Works Department, Chennai and accord sanction for re-designation of one temporary post of 'Executive Engineer' as 'Deputy Chief Engineer (Irrigation)' and another one temporary post of 'Executive Engineer' as 'Deputy Chief Engineer (General)' in the office of the Engineer-in-Chief, Water Resources Department and Chief Engineer (General), Public Works Department, Chennai with immediate effect, without any changes in the scale of pay attached to the posts.

7. This order issues with a concurrence of Finance Department vide its U.O.No.16749/CMPC/2020, dated 02.09.2020.

**(BY ORDER OF THE GOVERNMENT)**

**K.MANIVASAN,**
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

---

## ABSTRACT

Treasuries and Accounts Department – e-receipts-Inserting new e-Challan template (online/offline) as Form 9 (c) in the Tamil Nadu Treasury Code Volume-II – Orders – Issued.

**FINANCE (T&A-III) DEPARTMENT**

G.O.(Ms)No.56 Dated:26.02.2021

Read:

1. G.O.Ms.No.400, Finance (T&A-III) Department, Dated 10.10.2013.
2. G.O.Ms.No.106, Finance (T&A-III) Department, Dated 31.03.2016.
3. The Principal Secretary/Commissioner of Treasuries and Accounts, Letter No.052690/IFMS/2016, dated 11.12.2020 & 28.12.2020.

**ORDER:-**

In the G.O first and second read above, the Government have issued orders for the implementation of the Integrated Financial and Human Resource Management System (IFHRMS) Project, which envisages integration of both Financial and Human Resource Management modules. As the system contemplates end to end solution for all financial activities, various rules, procedure for drawing payments from Treasuries are being inbuilt in the system. The objective of this Project is to remove various systemic deficiencies in the manual legacy system of operation and optimizing efficiency through comprehensive business process re-engineering.

2. In the letter third read above the Principal Secretary/Commissioner of Treasuries and Accounts Department has stated the following:-

i. The IFHRMS Project has been implemented in the entire State and all the payments in the State are being made through RBI's e-Kuber portal and the Pension payments have also been implemented in a phased manner across the State.

ii. The collections of receipts have been envisaged through e-challan module of the IFHRMS, Memorandums of Understanding (MoU) have been signed with SBI, Bank of Baroda and Indian Overseas Bank to play the rold of payment aggregator for collecting online/offline e-receipts through IFHRMS. The receipts of Government of Tamil Nadu will be credited into a single Account maintained by the Treasuries and Accounts Department with RBI Chennai. The RBI has to issue daily scroll for the receipts.

iii. The existing challan Form 9 of TNTC has slightly been modified to suit the requirements of e-receipts in IFHRMS Project.

3. Now, the Principal Secretary/Commissioner of Treasuries and Accounts has requested to approve the new format for collecting online/offline e-receipts (online/offline) through IFHRMS for inserting new e-challan template (online/offline) as Form 9 (c) in the Tamil Nadu Treasury code Volume-II.

4. The Government, after careful consideration of the proposal of Principal Secretary/Commissioner of Treasuries and Accounts approve the new format for collecting e-receipts (online/offline) through IFHRMS Project by inserting new e-challan template (online-Annexure-I/offline-Annexure-II) as Form 9 (c) in the Tamil Nadu Treasury code Volume-II.

**(BY ORDER OF THE GOVERNMENT)**

**S.KRISHNAN**

ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

## Wedding Greetings

| Bridegroom | Bride | Date & Venue |
|---|---|---|
| **Er.R.Karthik,** B.E., | **Er.A.Thanihai,** M.E.,<br>Assistant Engineer, PWD<br>Buildings Centre and Conservation<br>Section-III, Salem | **Reception on : 10.03.2021**<br>From 5.00pm onwards at<br>**S.S.K.R.Thirumana Mahal,**<br>Omalur to Tharamangalam Main Road, Velagoundanputhur<br>Bus Stop, Omalur, Salem District. |

***We wish them a happy & Prosperous Wedding Life -Editor***

**Transfer and Posting of Chief Engineers vide**
**G.O.(Rt)No.79, Public Works (A2) Department, dated : 24.02.2021**

| S. No | Name of the Engineer | Transfer and Postings |
|---|---|---|
| 1 | **Er.M.Rajamohan,** Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region, Chennai | Chief Engineer / Director General, Irrigation Management Training Institute, Trichy |
| 2 | **Er.R.Viswanath,** Chief Engineer, Water Resources Department, Coimbatore Region, Coimbatore | Engineer-in-Chief (Buildings) and Chief Engineer (Buildings), Chennai Region, Chennai |
| 3 | **Er.G.Muralidharan,** Chief Engineer / Director General, Irrigation Management Training Institute, Trichy | Chief Engineer, Water Resources Department, Coimbatore Region, Coimbatore |

**Transfer and Posting of Superintending Engineer (Civil) vide**
**G.O.(Rt)No.80, Public Works (A2) Department, dated : 24.02.2021**

| | | |
|---|---|---|
| 1 | **Er.K.Ayeratharasu Rajasekaran,** Superintending Engineer, Buildings (Construction & Maintenance) Circle, PWD, Chennai | Superintending Engineer / Professor, Irrigation Management Training Institute, WRD, Trichy |

**Transfer and Posting of Executive Engineer (Civil) vide**
**G.O.(Rt)No.81, Public Works (A2) Department, dated : 24.02.2021**

| | | |
|---|---|---|
| 1 | **Er.V.Rajendhiran,** Executive Engineer, PWD, | Executive Engineer (Civil), Lower Pennaiyar Basin Division, WRD, Villupuram |

**இரங்கல்:**

**பொறி.K.முருகேசன்,** வயது 50, உதவிச் செயற்பொறியாளர், பொபது, நீ.ஆ.அ. Fishing Harbour Project Sub Division, Nagapattinam (On Deputation) அவர்கள் 16.02.2021 அன்று ஈரோட்டில் காலமானார் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தாருக்கு நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**- ஆசிரியர்**

## ENGIBEF PHASE-V –SCHEME

| S.No. | ENGIBEF No. | Name & Address |
|---|---|---|
| 1 | V-351-MDU | **Er.B.Alagusundaram,**<br>AE, PWD, Buildings (C&M) Division, MW, Madurai |
| 2 | V-352-DMP | **Er.P.Vargunam,**<br>O/o AEE, PWD, Ground Water Sub Division, Dharmapuri |
| 3 | V-353-VNR | **Er.P.Mokkamayan,**<br>AE, PWD, WRD, Irrigation Section-I, Kaliyapatti |
| 4 | V-354-TVM | **Er.M.Ramesh,**<br>AE, PWD, WRD, Irrigation Section, Sankarapuram |
| 5 | V-355-CUD&VM | **Er.A.Karthik,**<br>AE, PWD, WRD, Dam Safety Sub Division, Tindivanam |
| 6 | V-356-TNJ | **Er.R.Thirumurugan,**<br>AE, PWD, O/o EE, PWD, Buildings (C&M), Division, Thanjavur |
| 7 | V-357-TNJ | **Er.R.Santhif Kumar,**<br>AE, PWD, O/o EE, PWD, Buildings (C&M) Division, Thanjavur |
| 8 | V-358-CHE | **Er.V.Sebasthi Devi,**<br>DSE, PWD, O/o CE, PWD, Technical Education Wing, Chennai-25 |
| 9 | V-359-TNJ | **Er.M.Arul Mozhi,**<br>AE, PWD, O/o EE, PWD, Buildings (C&M) Division, Thanjavur |
| 10 | V-360-DMP | **Er.V.C.Geetha,**<br>AE, PWD, Buildings (C&M) Section, MW, Krishnagiri |
| 11 | V-361-ERD | **Er.M.Jagadeesh,**<br>AE, PWD, WRD, Irrigation Section, Modakkurichi |
| 12 | V-362-TNL | **Er.J.Senthil Kumar,**<br>AE, PWD, WRD, O/o Fishing Harbour Pro. Div. Nagapattinam (O/D) |
| 13 | V-363-CBE | **Er.P.Periasami,**<br>EE, PWD, Technical Education Division, Coimbatore |
| 14 | V-364-ERD | **Er.S.Visvanathan,**<br>AEE, PWD, Agriculture Marketing Board, Chennai-25 (O/D) |
| 15 | V-365-ERD | **Er.V.Ravi,**<br>EE, PWD, Buildings (C&M) Division, Erode |
| 16 | V-366-CHE | **Er.G.Ramesh,**<br>AE, PWD, Buildings, Planning and Designs Circle, Chennai |

We request our member engineers who have not enrolled so far in ENGIBEF Phase V Scheme to enroll as full-fledged member by remitting the amount through core banking system '**TNPWD ENGIBEF, State Bank of India, A/C No.10031641514 of PWD Complex Branch, Chepauk, (IFSC Code SBIN0006489), Chennai" or through branch offices in Cash / Cheque / Demand Draft.**

We solicit your earnest co-operation to enroll in this Scheme & assist the deceased Engineers' family.

**"We expect more members to enroll in ENGIBEF PHASE V"**

**Er.M.Mathan**
Treasurer/ENGIBEF (Cell:9566426370)

**Er.M.Suganthi**
Secretary/ENGIBEF



**பொறி.K.முருகேசன்,** உதவிசெயற்பொறியாளர், பொபது, Fishing Harbour Project Sub Division, Nagapattinam, (On Deputation) அவர்கள் 16.02.2021 அன்று ஈரோட்டில் காலமானார். நமது பொறியாளர் சேமநலநிதி திட்டத்தின் மூலம் **ரூ.2,00,000/-**த்திற்கான காசோலையை அவர்களின் துணைவியாரிடம் 17.02.2021 அன்று நமது ஈரோடு கிளையின் பொறியாளர் சங்கச் செயலாளர் **பொறி.D.சந்திசேகர்,** பொறி.**D.கிருஷ்ணமூர்த்தி**, துணை கண்காணிப்புப் பொறியாளர்/இல்லப் பொறியாளர் அவர்களும் ஈரோடு கிளைச் சங்கத்தின் சார்பாக நேரில் சென்று காசோலையை வழங்கினார்கள்.

## FOR THE KIND ATTENTION OF OUR MEMBER ENGINEERS
## MEMBERSHIP SUBSCRIPTION FOR THE YEAR 2021

- **Annual Member Subscription -- Rs. 2000/-**
- **Life Membership Spl. Subscription -- Rs. 1000/-**
- **Retired Engineers (For Poriyaalar Only) -- Rs. 500/-**

- We request our member Engineers to pay the **SUBSCRIPTION FOR THE YEAR 2021** be a continuous member of our Association.
- For online transaction **A/c: 10031640837, IFSC: SBIN0006489, A/c Name: AOE, TNPWD, State Bank of India, PWD Complex, Chepauk, Chennai-600005**
- **Contact Nos.044-28515445 / 29510445**

**Solicit your earnest Co-operation in this regard**

**Er.D.Rajeshwar Babu**
Treasurer, AOE & AEA
**Cell: 9894154915**

**Er.K.Murugan**
General Secretary, AOE

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் கூட்டம் 18.02.2021 அன்று நடைபெற்று புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.






27.02.2021 அன்று தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் சார்பாக சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் பத்திரிக்கையாளாகள் சந்திப்பு நடைபெற்றது.

RNI No.TNBIL/2010/35983

Regd.News Magazine

Date of Publication : Third week of every month

தனி பிரதி ரூ.10/-

PORIYAALAR, Egmore RMS / 1 Patrika, Chennai Reg. No.T.N. / CH (C) / 307 / 21 - 23
Posted on : 22.03.2021, Licensed to Post without prepayment under WPP No.TN/PMG(CCR), WPP No.340/21-23



21.02.2021 அன்று ஈரோட்டில் நடைபெற்ற **பொறி.R.இளஞ்செழியன்,** கண்காணிப்புப் பொறியாளர், பொபது, கட்டடம் (க&ப) வட்டம், மருத்துவப் பணிகள், திருச்சி மற்றும் தலைவர், பொறியாளர் சங்கம், ஈரோடு கிளை அவர்களின் மகனின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது தலைமைச் சங்கப் பொறுப்பாளர்கள் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

**- ஆசிரியர்**

Printed by: **Mr.S.G.PARTHASARATHY**, and Published by: **Er.C.BALAMURUGAN**, M.E., PGDFE., on behalf of Association of Engineers, PWD from Association of Engineers, PWD, PWD Campus, Chepauk, Chennai - 5, and Printed at : V.P.S. Printers, 292, Triplicane High Road, Triplicane, Chennai - 5, and Published at Association of Engineers, PWD, PWD Campus, Chepauk, Chennai-5, Editor : **Er.K.MURUGAN**, M.E,.